<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 54/2024</u>

பெயர் : ஈஸ்வரன்
சாட்சி – வா.சா–2 நாள்: 15.04.2026

---

<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பு)</u>

1. வாதி குடும்பத்தார் எனது வீட்டின் அருகில் வசித்து வருவதால் கடந்த 40 வருடங்களாக எனக்கு அவர்களை தெரியும். தேசிங்கு கடந்த 25.07.2011 தேதியில் காணாமல் போனார். தேசிங்கின் தந்தை 2001ம் ஆண்டில் இறந்தார் தேதி நினைவில் இல்லை. தேசிங்கின் தாயார் 2024ம் ஆண்டில் இறந்தார் தேதி நினைவில் இல்லை.

2. தேசிங்கு காணாமல் போன பின்னும் தேடி பார்த்ததாக எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் தேடி பார்த்தார்கள் என்றால் அவர் காணாமல் போன நாளில் இருந்தே தேடி வந்தார்கள். எங்கு சென்று தேடினார்கள் என்றால் திருவண்ணாமலை மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் தேடி பார்த்தார்கள்.

3. வாதிகள் வேளாண்விரிவாக்க மையத்தில் சென்று எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு நினைவில் இல்லை. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயார் செய்தார். தேசிங்கு காணாமல் போனதற்கு கடந்த 29.11.2011 தேதியில் அவரது குடும்பத்தினர் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

4. வாதிகள் எந்த தேதியில் பல்லடம் வட்டாட்சியருக்கு மனு அளித்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. 2ம் பிரதிவாதி எந்த தேதியில் பதில் அளித்தார் என்று எனக்கு நினைவில் இல்லை. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளவாறு பல்லடம் வட்டாட்சியர் உரிய உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி வாரிசு சான்றிதழ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வா.சா.ஆ.17 கடித குறிப்பின் மூலம் எந்த அறிவுறுத்தலும் செய்யவில்லை என்றும், அவ்வாறு அறிவுறுத்தினார்

என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(sd/– V.Kalidasan)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பல்லடம்.